Paper ID: IC21

# அனுபவ வாதமும் இஸ்லாமிய மெய்யியல் சிந்தனையும் - ஒரு மெய்யியல் அணுகுமுறை

# Empiricism and Islamic Philosophical Thoughts: A philosophical Approach

**M. Aboobucker Mufizal**

Senior Lecturer, Department of Philosophy,
Faculty of Arts, University of Peradeniya.
mufizal77@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய உலகில் இஸ்லாமியக் கருத்துக்களின் பரப்பும், அதன் அனுபவ ரீதியான பொருத்தப்பாடும் பற்றிப் பல்வேறு தளங்களில் பேசப்படுகின்றது. இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கை நெறியாக ஏற்கப்பட்டுள்ளது ஆனால் எல்லா விதமான விஞ்ஞானங்களையும், வாழ்வியல் நெறிகளையும் உள்ளடக்கியதான அறிவியல் மற்றும் மெய்யியல் சிந்தனைகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளதா என்பது ஓர் அறிவு பூர்வமான வினாவாகும். இஸ்லாமிய சமய செயற்பாடுகள் சமயமா? இல்லை அது ஓர் நடைமுறை சார் நவீன உலகிற்கான தீர்வுகளைக் கொண்டுள்ளதா? என்பது தொடர்பான பல்வேறு உலகளாவிய உரையாடல்கள் புத்தி ஜீவிகளிற்கிடையேயும், சாதாரண மக்கள் வாழ்வியலிலும் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. மனித வாழ்வு அன்றாடம் பல்வேறுபட்ட அனுபவ ரீதியான பிரச்சினைகளைக் கொண்ட ஓர் நடைமுறைக் கட்டமைப்பாகும். இவ்வாறான நிலையில் ஒரு இஸ்லாமியர் தனது அனைத்து அனுபவ ரீதியான பிரச்சினைகளுக்கும் இஸ்லாமும் அது சார்ந்த மார்க்க அறிஞர்களும் அல் குர் ஆன், ஹதீஸ் அடிப்படையில் தமக்கான அனுபவ ரீதியான தீர்வுகளை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். ஆனால் அனுபவம் சார்ந்த மானிடப் பிரச்சினைகளைத் தீர்க்க இஸ்லாமிய சமயத்தின் வழிகாட்டல் போதுமானதாக உள்ளதா? அதற்கான புதிய அணுகுமுறைகள் ஊடாக அதனை இன்னும் வலிமைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளதா? அதற்கான புதிய அணுகுமுறை சார்ந்த வழிமுறைகள் என்ன? இஸ்லாமிய வரலாற்றில் சமூக விஞ்ஞானத் துறைகளில் தமது பங்களிப்பை வழங்கிய முன்னோடிகள் எவ்வாறான அணுகுமுறைகளைக் கொண்டிருந்தனர் ? அனுபவ அறிவுசார் பிரச்சினைகளுக்கு அவர்களது தீர்வுகள் எவ்விதமாக அமைந்திருந்தன ? என்பதையும் தொடர்புபடுத்தியதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. இவ் ஆய்வினை சிறப்பாக்கிக் கொள்ள விபரணவியல், ஒப்பீட்டு முறை பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை மேலைத்தேய மெய்யியல் கருத்தான அனுபவ வாதம் இஸ்லாமிய வாழ்வியல் தத்துவத்தில் எவ்வாறான செல்வாக்கினைச் செலுத்திக் கொண்டிருக்கின்றது என்பது தொடர்பாகவும் ஆராய்கின்றது.

**திறவுச்சொற்கள் :** மெய்யியல், அனுபவ வாதம், சமூக விஞ்ஞானம்.

## இஸ்லாமிய வாழ்வியல் மற்றும் சிந்தனையில் அனுபவவாதம் - ஓர் மெய்யியல் பார்வை

இஸ்லாம் அடிப்படையில் கடவுளின் இருப்பு, அவரது பண்புகள், படைப்பினங்களில் அவரது கட்டுப்பாடு என்பவற்றைக் கொண்ட ஓர் வாழ்வியல் பின்னணியாகக் காணப்படுகிறது. இவ்வாறான சிந்தனைகள் கிறிஸ்தவ, யூத மதங்களிலும் முக்கிய செல்வாக்கைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இஸ்லாம்

ஓர் பூரண வாழ்வியல் கோட்பாடாக இருக்கின்ற அதேவேளை அதில் விபரிக்கப்படும் சமூக விஞ்ஞானம் சார் கருத்துக்களையும், கோட்பாடுகளையும் அறிந்து விளங்கி அதன் அடிப்படைகள் எவ்வாறான தளங்களைக் கொண்டுள்ளன. என்பது தொடர்பாக விளக்கவுரை அளித்த சிந்தனையாளர்களை சார்ந்ததாகவே அமைந்துள்ளது. இவ்வாறான விளக்கவுரைகளின் அர்த்தம் காலத்துக்கு காலம் வேறுபட்டு வழங்கப்பட்டு வந்திருந்தாலும். இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களாய்ப் பேசப்படுகின்ற கருத்துநிலை மாறாததாக இருந்து வருவது முக்கியமானதாகும்.

''நிச்சயமாக (அல்லாஹ் இடத்தில்) அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம் தான்'' (அல் குர் ஆன் 3:19)

இந்த அடிப்படையில் இருந்து இஸ்லாமிய சமூக விஞ்ஞானக் கருத்துக்களுக்கும் அதன் அனுபவ அறிவுத் தொடர்புக்குமான பின்னணியை இவ் ஆய்வுக்கட்டுரை தனது பிரதான பரப்பாகக் கொள்கின்றது.

இஸ்லாம் அனுபவ வாத அறிவுக்கும் அதன் பிரயோகத்திற்கும், பிரயோக முறைக்கும் எவ்வாறான முக்கியத்துவத்தை வழங்குகிறது.? மாறாக இஸ்லாம் பகுத்தறிவுவாத விழிப்புணர்வுக் கருத்துக்களை மட்டுமே கொண்டதா? மாறாக இரண்டு கருத்துக்களையும் ஒருங்கிணைத்து செல்லக் கூடிய ஓர் விசேட பொறிமுறை இஸ்லாமிய கருத்துக்களில் காணப்படுகின்றதா? போன்றன இஸ்லாமிய மெய்யியல் குறித்த பாடப்பரப்புடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. இதுவே இஸ்லாமிய சமய மெய்யியல் குறித்த ஆய்வுக்கான சிறந்த அடிப்படையையும் வழங்குகிறது.

நவீன உலகின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் குறித்த துறைகளில் மேலைத்தேய அனுபவ வாதம் தொடர்பான அணுகுமுறை பிரதான இடத்தை வகிக்கின்றது. மறுமலர்ச்சிக் காலத்தைத் தொடர்ந்து ஐரோப்பாவின் மனித அறிவுக்கான வழிகாட்டல்கள் இரண்டு விதமான சிந்தனை முறைகள் மூலம் முன்வைக்கப்பட்டிருந்தது.

1. பகுத்தறிவு வாதம்
2. அனுபவ வாதம்

இவ்விரு முறைகளும் மேலைத்தேயத்தின் அறிவு வழிப் பாரம்பரியத்தின் தோற்றத்தில் பெரும் செல்வாக்கு செலுத்தியவைகளாகும். பகுத்தறிவு வாதம் காரணகாரியத் தொடர்பு, அளவையியல் முக்கூற்றுத் தத்துவம் என்பன தொடர்பாகவும் அனுபவ வாதம் அறிவு தொடர்பான விடயங்களில் புலன் உணர்வு சார்ந்த அறிவுக்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. அறிவு வாதிகள் ஐரோப்பாவில் 17ம், 18ம் நூற்றாண்டைச் சார்ந்த டேக்காட், ஸ்பினோசா, லைபினிஸ்ட் என்போரும் அனுபவ வாதிகள் 18ம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் தத்துவவாதிகளான, டேவிட் ஹியூம், லொக், பேர்க்லி போன்றவர்களை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்தது. இது பிற்கால மேலைத்தேய விஞ்ஞான கண்டுபிடிப்புக்களுக்கான பிரதான காரணியாகவும் அமைந்ததாக வில்லியம் ஜேம்ஸ் குறிப்பிட்டிருந்தார். அனுபவ வாதக் கொள்கையின் பிரதான அம்சம் மனித அறிவுக்காக அனுபவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த முடியாத எதனையும் சந்தேகிப்பதே ஆகும். ஆனாலும் பி'ப் பேர்க்லி போன்றோர் சமயம் சார் அனுபவவாதங்களையும் ஏற்கின்றார்.

அனுபவ வாதம் மேலைத்தேய விஞ்ஞான விருத்தியில் பலமான செல்வாக்கை கொண்டிருந்தது. மேலைத்தேய நாடுகள் பௌதீகவியல், உளவியல், உயிரியல் தொடக்கம் பொருளாதாரம் வரையான அனைத்துவித துறைகளையும் இன்னும், அரசியல், நன்மை, தீமைப் பகுப்பாய்வு போன்ற பல்வேறுபட்ட துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தி இருந்தது. அதாவது இன்றைய ''நடைமுறை

அறிவு'' என்ற வாதத்திற்கான விளக்க உரையாக அனுபவ வாதம் பிரபலம் பெற்றுவிட்டது. மேலைத்தேய சமூகத்தினரின் விருப்பங்களை உச்ச மட்டத்தில் திருப்திப் படுத்துவதற்கான வழிவகைகளை அவை கொண்டிருந்தது எனலாம். மனித தேவைகள் அதன் செயற்பாடு என்பவற்றை அனுபவ வாத அணுகுமுறைகள் சிறப்பாகக் கண்டறிந்திருந்தன.

அனுபவ வாதம் பிரதானமாக இரண்டு அடிப்படைகளைக் கொண்டிருந்தது.

01. அனைத்துக் கருத்துக்களும் அனுபவத்தில் இருந்தே தொடங்குகின்றன.
02. பொருத்தமான தீர்ப்பு ஆதாரத்தின் ஊடாகவே எதுவும் நிறுவப்படல் வேண்டும்.

இன்னும் அனுபவத்தில் உள் அனுபவம், வெளி அனுபவம் என்பனவற்றை பேர்க்லி போன்ற ஒரு சில அனுபவ வாதிகள் ஏற்கின்றனர்.

இந்த வகையில் அனுபவ வாதம் தொடர்பாக இஸ்லாமியக் கண்ணோக்கு என்ன சொல்கின்றது, என்ற கருத்தை நோக்குவோமாயின் அவை இரண்டு வகையாக அறிஞர்களால் நோக்கப்படுகின்றது.

01. இஸ்லாமும் அனுபவ வாதமும் ஒன்றாக பயணிக்கின்றன.
02. இவ்விரண்டும் மனிதன், பிரபஞ்சம் பற்றிய இரு வெவ்வேறு முரண்பட்ட கருத்துக்களாகும்.

இங்கு முதலாவது விடை இஸ்லாத்தில் நவீனத்துவத்தை எதிர்பார்க்கின்ற மற்றும் கிறிஸ்தவ புரட்டஸ்தாந்து போன்ற மாறுதல்களை எதிர்பார்த்து நிற்பவர்களால் வாதிடப்படுகின்றது. சடங்கும் அனுஸ்டானங்களும் இறைவனுக்கும், தனி மனிதனுக்கும் இடையேயான தொடர்பாக மட்டும் கொள்ளப்பட்டு ஏனைய அனைத்து உலகளாவிய விடயங்களும் நடைமுறைகள், அனுபவ வழிகளில் பேணப்பட வேண்டும் என்பது இக் கருத்தின் மறு அர்த்தம். இந்த வகையில் அரசியல், பொருளாதார மருத்துவம் போன்ற துறைகள் மேலைத்தேய சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும். ஆனால் இங்கு அனுபவ வாதம் என்பது உள் மற்றும் வெளி அனுபங்கள் தொகுதி என ஏற்றுக் கொள்வோமாயின் இக்கருத்தில் முரண்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவு எனலாம்.

ஏனெனில் வஹி தொடர்பான நபி(ஸல்) அவர்களின் நம்பிக்கை ஒரு உள் அனுபவம் சார் செயலாகவே கருதப்படுகிறது. அதே போன்று பிரபல அனுபவ வாதியான ஜோன் லொக் கடவுளின் மறைவான விடயங்களை நம்பும் ஓர் கிறிஸ்தவராவர். இந்த வகையில் இஸ்லாம் அனுபவத்தோடு இணைந்த ஒரு வாழ்க்கை நெறி எனக் கொள்ளப்படும். மாறாக இஸ்லாத்திற்கும் அனுபவத்துக்குமிடையே ஒவ்வாத தன்மை காணப்படுகின்றது. அல்லது 'இஸ்லாம் அனுபவங்களின் தொகுப்பிலிருந்து தூரமாக்கப்பட்ட ஓர் சமயம்' என்ற கருத்தை முன்வைப்போர் அவற்றைக் கோட்பாடுகளில் மட்டுமன்றி ஆழமான நிலையிலிருந்து நோக்க வேண்டும். ஏனெனில் இஸ்லாம் நடைமுறைக்கேற்ற மார்க்கம் என்று பலராலும் ஏற்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு சில விடயங்களில் மேலைத்தேய அனுபவ அணுகுமுறைகளுடன் ஒத்திணையாத போக்கினை முஸ்லிம்களும், முஸ்லிம் நாடுகளும் பின்பற்றுகின்ற போதே இவ் வேறுபாடும், வெறுப்புணர்வும் ஏற்படுகின்றது. ''உலகப் போக்கிலிருந்து ஒதுங்கிச் செல்லல்'' என்ற சர்வதேச குற்றச் சாட்டு முஸ்லிம் உலகை நோக்கி முன்வைக்கப்பட இதுவே பிரதான காரணமாகின்றது.

உண்மையில் அனுபவ வாதம் ஒரு பரந்துபட்ட கருத்தாக நோக்கப்படுகின்ற வேளையில் அது ஓர் ''புறம் சார்ந்த'' அனுபவங்களின் தொகுப்பாகவே விஞ்ஞானிகளால் நோக்கப்பட்டது. மத்தியகால நம்பிக்கைகளும், அதன் சமய விஞ்ஞானமும் புலன் உணர்வுகட்கு அப்பாற் பட்டிருந்தமையால் அவற்றை அனுபவம் என்ற வட்டத்துக்குள் ஏற்றுக் கொள்ள முடியாத நிலை வரலாற்றில்

ஏற்பட்டிருந்தது. இது கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய சமயங்களின் பிரச்சினையாகவும் இருந்தது. இதற்கான பிரதான காரணம் காரண காரியத் தொடர்பு மற்றும் கணிதத் திறன் வாய்ந்த துறைகளாக சமயமும் அதன் கருத்தும் இல்லாததினால் அவற்றை விஞ்ஞானம் என நிருபிக்க முடியாத ஒரு விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதிலுள்ள பிரதான பிரச்சினைகள் பகுத்தறிவு மற்றும் உள்ளுணர்வு வாதம் என்பன குறித்த கிரேக்கக் கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டு, அறிவு குறித்த புதிய வகையான விளக்கங்கள் நவீன காலத்தில் முன்வைக்கப்பட்டமையாகும். ஏனெனில் கிரேக்க கால அறிவும் அதன் வரைவிலக்கணங்களும் மிகவும் பரந்துபட்டதாகக் காணப்பட்டது. கடவுள் சமயம், மனித ஒழுக்க நெறி போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் அறிவோடு தொடர்புபடுத்தி நோக்கப்பட்டன. இவ்வகையான கருத்துக்கள் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய சிந்தனைகளோடு தொடர்பு பட்டதாகவும் அவற்றினை ஏற்கக்கூடிய அறிவுக் கட்டமைப்பைக் கொண்டதாகவும் அனுபவ அறிவினை முதன்மைப் படுத்தியதாகவும் காணப்பட்டது. ஆனால் நவீன காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் சமயச் சிந்தனை கொண்ட அறிவுக்கு அல்லது ‘‘அக்ல்’’ என்பதற்கு உரிய இடம் வழங்கவில்லை.

அக்ல் தொடர்பான விளக்கம் அல் குர் ஆனில் 49 இடங்களில் பேசப்படுகிறது. ‘‘சிந்தித்து விளங்குதல்’’ அல்லது நியாய உணர்வு என்ற அர்த்தத்தை உடைய இது மேலைத்தேய அறிவு தொடர்பான கருத்தியலிலிருந்து வேறுபட்டது. அல் குர் ஆன் மனிதர்கள் தமது அக்ல் மூலம் சிறப்பான பயன்களைப் பெறவேண்டுமென எதிர்பார்க்கின்றது. உலகம் படைப்புக்கள், வானம், பூமி மழை, வெயில் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்புபடுத்தப்பட்டு விளங்கப்படுத்தப்படுகின்ற அதே வேளை அவற்றின் மீதான அக்கறையின்மை அக்ல் இன் மீதான குறைபாடாகவே நோக்கப்படுகின்றது. இன்னும் அளவையியலில் பயன்படுத்தப்படும் அரிஸ்ரோட்டிலின் முக்கூற்று தொடர்பான நியாயவாதம் உண்மைகளை நிறுவுவதாகக் காணப்பட்டாலும் அதன் நிச்சயத்தன்மை கேள்விக்குரியது. அவை வெறும் அனுபவத் தோற்றத்திலான பண்புகளுடன் தொடர்பு பட்டதாகவே உள்ளது. மாறாக அக்ல் உள் ஒளி சார்ந்ததாக இருக்கின்ற அதே வேளை வெளிப்பாட்டுத்திறனுடனும் ஒத்தியங்கும் ஓர் ஆழமான இஸ்லாமியக் கருத்தாகும்.

அனுபவ வாதக் கருத்திற்கும் அக்லுக்குமிடையே பாரிய தொடர்புண்டு பாரம்பரிய இஸ்லாமிய வாதிகள் நவீன விடயங்களை நிராகரிப்பதற்காகக் கூறும் காரணங்களை அக்லின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ள முடியாது. சமயவாத சிந்தனைகளும், அனுபவ வாத இணைப்பும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். ஆனால் நவீனத்துவவாதிகள் இஸ்லாம் நவீன உலகியல் பிரச்சினைகளுக்கு போதிய தீர்வை நேரடியாக சொல்லவில்லை என்பதற்காக அனுபவ வாதக் குறைபாடுள்ளதாக விமர்சிக்கின்றனர். அதேவேளை பாரம்பரிய இஸ்லாமிய வாதிகள் நவீன அனுபவ வாதக் கருத்துக்களை ஏற்றுச் செல்வதனால் இஸ்லாம் தனது தனித்துவமான தன்மைகளை இழந்து வெறும் நடைமுறைகளின் அனுபவ வாத சமயமாக மாறிவிடும் என்ற கருத்தை முன்வைக்கின்றனர். இன்னும் சிலர் இஸ்லாமிய கருத்துக்கள் நவீனத்துவத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் இல்லாதவிடத்து அக்கருத்துகட்கு ஏற்ப இஸ்லாம் மாற்றப்பட வேண்டும் என்ற கருத்துக்களுக்கு எதிராக வாதிடுகின்றனர்.

இஸ்லாம் சீர்திருத்தப் படவேண்டும் இன்னும் இஸ்லாம் அனுபவத்துடன் இணைந்து செல்ல வேண்டும் என்னும் கருத்தை முன்வைப்போர் இஸ்லாத்திற்கேற்ப ஏனைய உலகியல் கருத்துக்கள் ஏன் மாற்றியமைக்கப்படக்கூடாது என்பதைப் பற்றி சிந்திப்பதில்லை. உண்மையில் உலகளாவிய கோட்பாடுகள் தமக்கிடையேயும் கோட்பாட்டாளர்களின் வாழ்வியல்களிற்கிடையேயும் பல்வேறு

வேறுபாடுகளைக் கொண்டமைந்தவையாகக் காணப்படுகின்றன. அவை ஒன்றிணைந்த அளவில் தமது கருத்தினை முன்வைப்பதில்லை. சமூக விஞ்ஞானங்களில் பயன்படுத்தப்படும் அரசியல் கோட்பாடுகளான சமூக ஒப்பந்தக் கோட்பாடு இயற்கை நிலைக் கோட்பாடு போன்ற பல்வேறு கோட்பாடுகள் கோட்பாட்டளவில் தம்மிடையே வேறுபட்ட தளங்களைக் கொண்டுள்ளன.

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல் குர் ஆன், ஹதீஸ் போன்றவற்றில் கூறப்படும் கருத்தியலிற்கும் உலகளாவிய அனுபவத்திற்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இஸ்லாமிய நேரடி அனுபவத்திற்கும் அக்கிலிற்கும் உட்படுத்துவதிலுள்ள சிக்கல் நிலை தொடர்பாகவும் இக் கட்டுரையில் பேசப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகளில் விஞ்ஞான உலகத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையே முரண்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன.

கருதுகோள்களின் மூலம் உருவாக்கப்பட்ட விஞ்ஞானம் அக் கருதுகோள்களாலேயே நிராகரிக்கப்படுகிறது. எனினும் பொப்பரின் அறிவியல் முறையியல் மற்றும் அறிவாராய்ச்சியியல் தொடர்பான பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய அறிவாராய்ச்சிச் சிந்தனை நெறியில் நின்று பதில் கூறப்படவில்லை. பொய்ப்பித்தல் மூலமே புதிய கருத்துக்கள் உருவாவதாக கார்ள் பொப்பர் குறிப்பிடுகிறார். ஆனால் இஸ்லாமிய கருத்து நிலை குறித்த விடயங்கள் இவ்வாறானவையல்ல அவை எக்காலத்திற்கும் பொருத்தமான ''நிலைபேறுதன்மை'' என நம்பப்படுகிறது. எனவேதான் இஸ்லாத்திற்கும் அனுபவவாத மற்றும் பிரயோக உலகியற் கோட்பாட்டிற்குமிடையே ஒரு பொருத்தப்பாட்டை கொண்டு வரவேண்டிய அவசிய நிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் தான் இஸ்லாமியக் கோட்பாடுகளை உலக அனுபவ வாதக் கோட்பாடுகளுக்கு ஏற்ப மாற்றியமைத்தல் என்பதை அனுபவ வாதக் கோட்பாடுகளுக்கும் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கும் உள்ள முரண்பாடுகளை தீர்ப்பதால் இஸ்லாமியக் கோட்பாடுகளின் அறிவு பூர்வமான முன்னேற்றத்தின் பின்னணியை ஆராய்ந்து பார்ப்பதாக அமையும்.

மனிதனை அளவுக்கு மீறி உயர்த்தி விடுவதன் மூலம் கடவுளை நிராகரிக்கின்ற போக்கினைக் கொண்ட கோட்பாடுகளும், சிந்தனைகளும் உலகளவில் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டியவையாகும் இதனை அடிப்படையாகக் கொண்டதாகவே நவீன இஸ்லாமிய சீர்திருத்தக் கருத்துக்கள் உள்ளடக்கப்பட வேண்டும். இஸ்லாத்திற்கும் உலகளாவிய அனுபவக் கோட்டபாடுகளுக்கும் இடையோன இந்த முரண்பாட்டு நிலைக்கான நிரந்தர தீர்வு இவ்வாறான தளத்திலிருந்தே ஆராயப்பட வேண்டும் என்பது இவ் கட்டுரையின் நோக்கமாகும்.

**References.**


- Wool house, R. S., (1988) the Empiricists. Contributors, Oxford University Press, Oxford.
- Fakery Majid (1983) **a History of Islamic Philosophy**, London: Longman.
- Richard Rorty, (1997) Robert Brandom., Empiricism **and the Philosophy of Mind,** Harvard University Press.
- அனஸ், எம்.எஸ்.எம், (2003) **மெய்யியல் அறிமுக உரைகள்** பண்பாட்டு ஆய்வு வட்டம், பேராதனை.
- அனஸ், எம்.எஸ்.எம், (2006) **மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை** குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
- அனஸ், எம்.எஸ்.எம், (2001) **தற்கால இஸ்லாமிய சிந்தனை** பண்பாட்டு ஆய்வு வட்டம், பேராதனை.